1994 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 291, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 292, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

292–

## பரமக்குடி தாலுக்காவில் பால் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை

***16500-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி தாலுகாவில் பால் உற்பத்தியை அதிகப்படுத்தவும், புதிய பால் வழித்தடங்கள் ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி தாலுகாவில் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், புதிய பால் வழித்தடங்கள் ஏற்படுத்தவும் 93 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் 48 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 45 சங்கங்கள் செயல் இழந்த நிலையில் உள்ளன. பரமக்குடி தாலுகாவில் உள்ள சங்கங்களில் நாள் ஒன்றுக்கு 4834 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. 3446 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 1388 லிட்டர் பால் மேற்படி ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது.

இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பரமக்குடி தாலுகாவில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பாலைச் சேகரிக்க இரண்டு சேகர வழித் தடங்களில் ஊர்தியை இயக்கி பால் சேகரம் செய்து பரமக்குடியில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திற்குக் கொணர்ந்து சேர்க்கப்படுகிறது. அதனால், மேலும் புதிய பால் வழித்தடம் இயக்க வேண்டிய சூழ்நிலை தற்போது இல்லை.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தாலுகாவில்தான் அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இராமநாதபுரம் மாவட்டத்திலேயே பரமக்குடியில்தான் பால் குளிரூட்டு நிலையம் இயங்கி வருகின்றது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஏற்படுத்தி புரட்சி செய்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியில் இன்னும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஏற்படுத்துவதற்கும், மாண்புமிகு அமைச்சரவர்கள் பால் உற்பத்தியைப் பெருக்கவும், செயல் இழந்த சங்கங்களை மீண்டும் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுப்பார்களா; என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, செயலிழந்த சங்கங்களைச் செயல்படுத்துவதற்காக அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், புதிய பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கான ஆய்வை அரசு மேற்கொண்டிருக்கிறது. விரைவில் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10.30*

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. கடன், 'தாட்கோ' கடன், 'மகரம்' போன்றவற்றில், அரசு 50% மானியத்தில் கடன் வழங்குகிறது. அவ்வாறு 50% மானியத்தில் கடன் பெறுகிற நபர்கள் எல்லாம், தனியாருக்குப் பாலை ஊற்றி, அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆகவே, ஐ.ஆர்.டி.பி. 'தாட்கோ', 'மகரம்' போன்றவற்றில் வழங்குகிற அரசு கடன்களைப் பெறுகிற நபர்களுக்காவது, பால் உற்பத்திக்கு உதவி செய்கிறவகையில், புதிய கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துவதற்கு, அவ்வாறு அரசு கடன்களைப் பெறுகிற நபர்கள், ஒட்டுமொத்தமாக அந்தப் பாலையெல்லாம் அரசுக்கே கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில், உற்பத்தியை அதிகப்படுத்த, இராமநாதபுரம் மாவட்டத்தில், புதிதாக இந்த நிதியாண்டே ஒரு பால் உற்பத்தியாளர் இணையம் ஏற்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த ஆய்வுகளின் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், புதிய ஒன்றியத்தை உருவாக்க அரசு முயற்சிகள் செய்யும்.